<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்</u>

<u>நாள்.29.01.2026</u>

<u>O.S. No.69/2024</u>

<u>வா,சா1-சிரி. முத்துராஜன்</u>

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

என்னுடைய அப்பாவிற்கு 1ம் பிரதியின் சொசைட்டியில் பங்கு இருந்தது என்றால் சரி. எனது அப்பா 2015 ல் இறந்த பிறகு மேற்படி பங்கு எனது அம்மா பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது. எனது அப்பாவின் வாரிசுதாரர்கள், அம்மா, 2 ஆண்மக்கள், 1 பெண்மக்கள் ஆகும். வாரிசு அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நாங்கள் வேண்டுகோள் கடிதம் கொடுத்து எனது அம்மா பெயருக்கு மாற்றம் செய்தோம். எனது அம்மா பெயரிலிருந்து 2 ம் பிரதி பெயரில் எப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெரியாமல் மாற்றம் செய்து விட்டார்கள். அந்த மாற்றம் செல்லத்தக்கது அல்ல என்று தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி

இந்த வழக்கிற்கு பின்பு 1 ம் பிரதியிடம் மேற்படி மாற்றம் சம்மந்தமாக மனு கொடுத்தேன் என்றால் சரி. அதேபோல் எனது தம்பி சிரி. கார்த்திகேயன் 1ம் பிரதியிடம் மனு கொடுத்தார் என்றால் சரி. வாசாஆ 1 ல் 1ம் பிரதி 14.06.2016 தேதி மேற்படி 2 மனுக்களையும் 1 ம் பிரதி நிர்வாக குழுவில் வைக்கப்பட்டது என்றால் தெரியாது. 19.06.2021 ம் தேதி 1 ம் பிரதி எனது மனு மீதான நடவடிக்கையை எனக்கு தெரிவித்து கடிதம் அனுப்பினார் என்றால் சரி.தேதி எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கடிதத்தில் 2 ம் பிரதியிடம் 15.09.2016 ம் தேதி சம்பவம் குறித்து விளக்கம் கேட்டதாக குறித்திருந்தது என்றால் சரி. 23.07.2001ம் தேதி நான் மதுரை உயர் நீதிமன்றத்தில் பங்கு மாற்றம் செல்லாது என்று மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரி.

இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் 1ம் பிரதி என்னுடைய மனுவின் மீது எந்த விதமான மேல் நடவடிக்கையும் எடுக்கமுடியாத சூழ்நிலையில் உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதி எனது உடன் பிறந்த சகோதரியின் கணவர் என்றால் சரி.